# Zonal Education office - Jaffna

**Practice examination for ICT results improvement of grade 11 students**

**ICT Chapters included 5 & 7 of grade 10**

**Time – 1hour**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) கையடக்கத் தொலைபேசிகளில் பெருமளவில் பயன்படுத்தப்படும் இலவசமான திறந்த மென்பொருள் வகையைச் சேர்ந்த பணிச் செயல்முறைமை.?

1. Symbian 2. iOS (iPhone OS)
3. Windows 10 4. Android

02) கணனியில் ஆளியை ON செய்தால் கணனியிலுள்ள சகலபாகங்களும் இயக்கத்திற்கு தயாராக உள்ளதா என்பதைப் பரிசோதிக்கும் செயற்பாடு.?

1. BIOS 2. CMOS 3. POST 4. MBR

03) **WIMP** எனப்படுவது.?

1. சாளரம், படவுரு, பட்டிகள், சுட்டான்
2. சாளரம், பட்டிகள், படவுரு, சுட்டான்
3. சாளரம், சுட்டான், படவுரு, பட்டிகள்
4. சுட்டான், சாளரம், படவுரு, பட்டிகள்

04) **FAT 32, ext4, Reiser FS, APFS** வகைக் கோப்புகள் பயன்படுத்தப்படும் பணிச் செயல்முறைமைகள் முறையே.?

1. Windows, Linux, Linux, Mac OS
2. Linux, Windows, Linux, Mac OS
3. Linux, Windows, Mac OS, Unix
4. Linux, Mac OS, Unix, Windows

05) பின்வருவளவற்றுள் எது ஒரு கோப்பின் இயல்புகளாக/பண்பாகக் கொள்ள **முடியாதது.**?

1. Read 2. Hidden 3. Write 4. Archive

06) பின்வருவனவற்றுள் எவை செல்லுபடியான சிலமுகவரிகளாகும்.?

A .GH5 B. $ G $ H5 C. GH5$ D. $ GH5

1. A, B 2. A, D 3. B, C 4. A, C

07) அமலன் வார இறுதியில் தனது ஓய்வுநேரத்தில் 30% ஐப் புத்தகங்கள் வாசிப்பதிலும் 50% ஐ விளையாடுவதிலும் 20% ஐ இனை பாடல் கேட்பதிலும் செலவிடுகிறான் விரிதாளில் மேற்குறித்த தரவுகளை வகைக்குறிக்க உகந்த வரைபடம் எது?

1. வரி (Line) வரைபடம் 2. சலாகை (Bar) வரைபடம்
3. வட்ட (Pie) வரைபடம் 4. சிதறு (Scatter) வரைபடம்

08) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் விரிதாள் மென்பொருளுக்கு **உதாரணமல்லாதது**.?

1. Open office calc 2. Lotus 1-2.3
3. Open office impress 4. Libre office calc

09) இலத்திரனியல் விரிதாள் மென்பொருளின் இயல்பு நிலையில் காணப்படும் பணித்தாள்களின் எண்ணிக்கை யாது?

1. 05 2. 03 3. 01 4. 02

10) விரிதாளில் கலமுகவரி C16இல் சூத்திரம் =$ A1/$B$15 உள்ளது இச்சூத்திரம் கலமுகவரி Dக்கு பிரதி செய்யப்படும்போது D16 கலத்தில் உள்ள சூத்திரம்.?
1. =$ A1/SB $15  2. = $ A1 /$D$15  3. = $ D1 / $A$15  4. =$ A1/$ B$ 16

**(10 x 2 ½ =25 புள்ளிகள்)**

---

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) i. இயக்க முறைமை ஒன்றின் தொழிற்பாடுகள் 3ஐ பட்டியற்படுத்துக? அவற்றில் ஒன்றை விபரிக்க.? **(4 புள்ளிகள்.)**

ii. முறைமை மென்பொருட்களின் வகைகளைத் தந்து அவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.? **(3 புள்ளிகள்.)**

iii. கணனி ஆரம்பத் தொழிற்பாட்டை மேற்கொள்ளும் விதத்தை சுருக்கமாகத் தருக.? **(5 புள்ளிகள்.)**

iv. கீழுள்ள இயக்க முறைமைகளை வழங்கும் நிறுவனங்கள் எவை?
a. Mac OS  b. Android  c. Windows  d. Symbian
**(4 புள்ளிகள்.)**

v. மொழிபெயர்ப்பி என்றால் என்ன உதாரணம் தருக.?
**(2 புள்ளிகள்.)**

vi. பணிச்செயல் மறைமையிலுள்ள பிரயோக மென்பொருட்கள் 3 தருக.?
**(3 புள்ளிகள்.)**

vii. பின்வரும் கோப்பு வகைகளுக்குரிய கோப்பு நீட்சிகளைத் தருக.
a. Executable  b. Access  c. Power point  d. Word

**(4 புள்ளிகள்.)**

**மொத்தம் 25 புள்ளிகள்**

**2) ஜேம்ஸ் நிறுவனத்தின் ஊழியர்களின் மாதாந்த சம்பளப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.**

Jaffna zone

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Emp Id | Name | Basic Salary | Allowance | Gross salary | Deducion | Net salary |
| 2 | E001 | Mahes | 34000 | 5100 | 39100 | 3400 | 35700 |
| 3 | E002 | Thasan | 45000 | 6750 | 51750 | 4500 | 47250 |
| 4 | E003 | Kiruba | 31000 | 4650 | 35650 | 3100 | 32550 |
| 5 | E004 | Roshan | 36000 | 5400 | 41400 | 3600 | 37800 |
| 6 | E005 | Thavam | 23000 | 3450 | 26450 | 2300 | 24150 |
| 7 | E006 | Keethan | 29500 | 4425 | 33925 | 2950 | 30975 |
| 8 | E007 | Senthan | 32300 | 4845 | 37145 | 3230 | 33915 |
| 9 | E008 | Karthees | 43000 | 6450 | 49450 | 4300 | 45150 |
| 10 | E009 | Raina | 34000 | 5100 | 39100 | 3400 | 35700 |
| 11 | E010 | Jegan | 28500 | 4275 | 32775 | 2850 | 29925 |
| 12 | Total Basic Salary | | 336300 | | | | |
| 13 | Average Basic Salary | | 33630 | | | | |
| 14 | | | | | | | |

i. அடிப்படை சம்பளத்தின் (Basic salary) 15% ஆக அமையுமாறு படிகள் கணிப்பிடப்படுகிறது. Mahes இன் படியைக் (Allowance) கணிப்பிடுவதற்கு D2 இனுள் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

ii. ஏனைய ஊழியர்களின் படியைக் (Allowance) கணிப்பிடுவதற்கு சூத்திரம் எழுதப்படவேண்டிய படிமுறைகள் எவை. **(4 புள்ளிகள்)**

iii. அடிப்படைச் சம்பளத்தையும் படிகளையும் கூட்டுவதன் மூலம் மொத்தச் சம்பளம் (Gross Salary) கணிப்பிடப்படுகிறது மொத்தச் சம்பளத்தைக் கணிப்பிடுவதற்கு கலம் E2 இனுள் இடப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

iv. அடிப்படை சம்பளத்தின் 10% மாகக் கழிவு(deduction) கணிப்பிடப்பட வேண்டியுள்ளது. கழிவு கணிப்பதற்கு F2 இனுள் இடப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

v. மொத்த அடிப்படைச் சம்பளத்திலிருந்த கழிவுகளை (deductions) கழிப்பதன்மூலம் தேறிய சம்பளம்(Net Salary) பெறப்படவேண்டியுள்ளது. தேறிய சம்பளத்தைக் கணிப்பதற்கு G2 இனுள் இடப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

vi. Total Basic Salary என்பதை A12 இனுள் உள்ளவாறு காட்சிப்படுத்த மேற்கொள்ளவேண்டிய படிமுறை யாது? **(3 புள்ளிகள்)**

vii. மொத்த அடிப்படைச் சம்பளம் கணிப்பதற்கு C12 இனுள் இடப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

viii. சராசரி அடிப்படைச் சம்பளத்தைக் கணிப்பதற்கு C13 இனுள் இடப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

**மொத்தம் 25 புள்ளிகள்**

3. **தரம் 11 மாணவர்கள் மாதாந்தப் பரீட்சை ஒன்றில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளது.**

| | A | B | C | D | E | G | H | I |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | SNO | Name | Science | Maths | ICT | Total | Average | Rank |
| 2 | 1 | Theyasvi | 98 | 100 | 97 | -- | -- | |
| 3 | 2 | Regina | 90 | 98 | 89 | -- | -- | |
| 4 | 3 | Niruji | 90 | 90 | 98 | -- | -- | |
| 5 | 4 | Sara | 60 | 76 | 79 | -- | -- | |
| 6 | 5 | mary | 50 | 45 | 67 | -- | -- | |
| 7 | Highest | | | | -- | | | |
| 8 | Lowest | | -- | | | | | |

i.தேஜஸ்வி பெற்ற மொத்தப் புள்ளிகளைக் கணிப்பதற்கு கலம் G3 இனுள் எழுதப்படிவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**


ii. தேஜஸ்வி பெற்ற சராசரி புள்ளியைக் கணிப்பதற்கு கலம் H2 இனுள்எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

iii. மாணவர்களின் நிலை (சராசரியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றதெனின்) நிலையைக் காண்பதற்கு I2 இனுள் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது? **(4 புள்ளிகள்)**

iv.விஞ்ஞான பாடத்துக்கான அதியுயர் புள்ளியைக் கணிப்பதற்கு C7 இனுள் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

v.விஞ்ஞான பாடத்துக்கான குறைந்த புள்ளியைக் கணிப்பதற்கு C8 இனுள் எழுதப்படவேண்டிய சூத்திரம் யாது? **(3 புள்ளிகள்)**

**மாணவர்களின் பெயர்களுக்கும் மொத்தப்புள்ளிகளுக்குமான வரைபு**




vi. மாணவர்களின் பெயர்களுக்கும் மொத்தப்புள்ளிகளுக்குமான வரைபு ( படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ) பெறுவதற்கான படிமுறைகள் எவை? **(3 புள்ளிகள்)**

vii. வரைபை பெறுவதற்கான விசைப்பலகை குறுக்கு வழி **( Keyboard Short cut )** எது? **(3 புள்ளிகள்)**

viii. படத்திலுள்ளதைவிட விரிதாள்களில் பயன்படுத்தப்படும் வேறு வகை வரைபுகளின் பெயர்களை தருக? **(3 புள்ளிகள்)**

**மொத்தம் 25 புள்ளிகள்**